**O.S. No. 190/2024**
**Date : 24.04.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 3 **திரு. கிருஷ்ணசாமி**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது திருமணத்திற்கு முன்பிருந்தே எனக்கு வாதி லட்சுமி அம்மாளை எனக்கு தெரியும். எனது மனைவி மூலமாக அவர் உறவினர். வாதி விவசாயம் தொழில் செய்து வருகிறார். அது தவிர வேறு தொழில் எதுவும் வாதி செய்யவில்லை. தாவா புரோநோட் எழுதிக் கொடுப்பதற்கு முன்பு நான் கிருஷ்ணவேணியை பார்த்ததில்லை. சாட்சி கையொப்பம் செய்த சக்திவேல் என்பவரையும் நான் அன்றைய தினம் தான் முதல் முறையாக பார்த்தேன். நான் வாதி வீட்டிற்கு வருவதற்கு முன்பாகவே பிரதிவாதி அங்கு வந்து விட்டார்.

2. பிரதிவாதி வாதிக்கு வட்டி செலுத்தினாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக பிரச்சனை ஏதேனும் நடந்ததா பஞ்சாயத்து நடந்ததா என்பது குறித்த விபரம் எனக்கு தெரியாது. நான் வாதியின் உறவினர் என்ற காரணத்தினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.24 15:32:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.